ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நமஃ.

ஸ்ரீ மதுசூதன சரஸ்வதி சுவாமிகளவர்கள்

சம்ஸ்கிருதத்திற் றிருவாய் மலர்ந்தருளிய

பிரஸ்தானபேதம்.



இது:


ஸ்ரீகோவிலூர் மடாலயாதிபதியாய் வீற்றிருந்த

திருக்கள ராண்டவர் என்னும்

ஸ்ரீவீரசேகர ஞானதேசிகர் பாதசேகரராகிய

ஸ்ரீசுப்பையசுவாமிக ளவர்களால்

தமிழில் வசனவடிவமாக மொழிபெயர்க்கப் பட்டு,




சென்னை:

ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

கோ. வடிவேலு செட்டியா ரவர்களாலும்,

மங்கலம் - சண்முக முதலியா ரவர்களாலும்,




சென்னை, கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.




முகவுரை.

பரம கருணாநிதி யாகிய ஸ்ரீ மதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகள் வித்வான்களாகிய முமுட்சுக்க ளெளிதி லுண ருமாறு அத்வைதசித்தி சம்க்ஷேபசாரீரக வ்யாக்யானம், பகவற்கீதா கூடார்த்த தீபிகை முதலிய கிரந்தங்களும் எளிதி லுணருமாறு சித்தாந்தபிந்து, வேதாந்த கற்பல திகை, ஆனந்த மந்தாகினி, பக்திரசாயனம், சிவமஹிம்ந ஸ்தோத்திர வ்யாக்யானம் முதலிய கிரந்தங்களும் இய ற்றியருளி யிருக்கின்றனரென்பது பிரசித்தம்; அவற் றுள், சிவமஹிம்ந ஸ்தோத்திரத்தின் ஏழாவது ஸ்லோ கத்தின்கண் ணுள்ள த்ரயி என்னும் பதோப லக்ஷண மாகச் சர்வப்பிரஸ்தான பேதங்களையுந் தெரிவிக்கும் விரிவாய வியாக்யானம் செய்தருளி யிருக்கின்றார். இந் தப் பிரஸ்தான பேதமென்னும் நூற்கும் அவ்வேழா வது ஸ்லோகத்தின் முதற்பதோப லக்ஷிதவியாக்யானத் திற்கும் சிறிதேனும் அக்ஷரபேதங் காணப்படாமை யின், பிற்காலத்தில் ஷை ஸ்வாமிகளே முமுட்சுக்கள்

அதைத் தனியே யுணருமாறு தனிக்கிரந்தமாகஎடுத்து வைத் தருளினாரென்று தெரிகின்றது. சர்வ சாஸ்திரங் களையு முணர்த்தும் இவ்வரிய நூல் தேவவாணியிலிருப் பதால் அவ்வமரார்வாணி யுணராத தமிழ் மக்கள் எளிதி லுணருமாறு அது ஸ்ரீகோவிலூர் மடாலயாதி பதியாய் வீற்றிருந்த திருக்களராண்டவர் என்னும் ஸ்ரீவீரசேகர ஞானதேசிகர் பாதசேகரராகிய ஸ்ரீ சுப்பையசுவாமிக ளாற் றமிழில் வசன வடிவமாக மொழி பெயர்க்கப் பட்டது.








ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநமஃ

பிரஸ்தானபேதம்.

வானமிவ் வுலகெலா மறிவிற் ரேற்றலாற்
கானலி னீரெனக் கருது வாயென
ஞானநற் குரவனுப் நவிலு மாமத
ஞனவின் கயமுக னடிகள் போற்றுவாம்.



சர்வ சாஸ்திரங்கட்கும் சாக்ஷாத்தாகவேனும் பரம்பரையாகவேனும் பகவானிடத்திலேயே தாற்பரியம் என, அவற்றின் பிரஸ்தான பேதம் ஈண்டுத் தொகுத்துக் கூறப்படுகின்றது.

அங்ஙனமன்றே, இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் என வேதங்கள் நான்காம். சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருக்தம், சந்தசு, சோதிடம் என வேதத்தினங்கங்கள் ஆறும். புராணம், நியாயம், மீமாம்சை, தர்மசாஸ்திரம் என உபாங்கங்கள் நான்காம். ஈண்டு உபபுராணங்களுக்குப் புராணத்தி லடக்கம்; வைசேஷிக சாஸ்திரத்திற்கு நியாயத்தி லடக்கம்; வேதாந்த சாஸ்திரத்திற்கு மீமாம்சையி லடக்கம்; மகாபாரத ராமாயணங்களுக்கும் சாங்கிய பாதஞ்சல பாசுபத வைஷ்ணவாதிகளுக்கும் தர்ம சாஸ்திரத்தி லடக்கம் என ஒருங்கு சேர்ந்து பதினன்கு வித்தைகளாம்.

“புராணம், நியாயம், மீமாம்சை, தர்மசாஸ்திரம், அங்கங்களோடு கூடிய வேதங்கள், வித்தைகட்குந் தர்மத்திற்கும் பதினான்கு ஸ்தானங்கள்” (1-3) என்று யாஞ்ஞவற்கியரால் கூறப்பட்டுளது.

இவையே உபவேதங்கள் நான்கோடுங் கூடிப் பதினெட்டென்று விளங்குகின்றன. ஆயுள்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்த வேதம் (சாஸ்திரம்) என உபவேதங்கள் நான்காம். சகல ஆஸ்திகர்கட்கும் இவ்வளவினவே சாஸ்திரப் பிரஸ்தானங்களாம்; அன்

ணிய ஏகதேசிகளின் பிரஸ்தானங்களும் இவற்றிலேயே அடக்கமாதலின்.

அவ்வாருயின், நாஸ்திகர்கட்கும் வெவ்வேறு பிரஸ்தானங்கள் உள. அவை இவற்றுள் அடங்காவாகவின், தனிமையாக எண்ணிக்கை செய்ய யோக்கியங்களாம்.

அங்ஙனமன்ரே, சூனியவாதத்தாலொரு பிரஸ்தானம் மாத்யமிகர்கட்கு, க்ஷணிக விஞ்ஞானமாத்திர வாதத்தால் மற்ருெரு பிரஸ்தானம் யோகாசாரர்கட்கு, ஞானுகார அனுமேய க்ஷணிக பாகியார்த்த வாதத்தால் வேருெருபிரஸ்தானம் சௌத்திராந்திகர்கட்கு,பிரத்யக்ஷ சலக்ஷண க்ஷணிக பாகியார்த்த வாதத்தால் மற்ருெரு பிரஸ்தானம் வைபாஷிகர்கட்கு. இவ்வாறு சௌகதர்கட்கு நான்கு பிரஸ்தானங்கள்.

அவ்வாறே தேகாத்மவாதத்தால் ஒரு பிரஸ்தானம் சார்வாகர்கட்கு, இவ்வாறே தேகத்திற்கு வேருய்த் தேகபரிமாண ஆத்மவாதத்தால் மற்ருெருபிரஸ்தானம் திகம்பரர்கட்கு ஆம். இந்தப்பிரகாரம் ஒருங்குசேர்த்து நாஸ்திகர்கட்கு ஆறு பிரஸ்தானங்கள் உளவே,. அவை ஏன் கூறப்படவில்லை எனின்,

உண்மையே, அவற்றிற்கு வேத பாகியத்தன்மை யுண்மையின் மிலேச்சர்கள் பிரஸ்தானங்கள்போற் பரம்பரை யாகவேனும் புருஷார்த்தத்திற்கு உபயோக மில்லாமையின், அவை உபேக்ஷிக்கத் தக்கனவே. ஈண்டுச் சாக்ஷாத்தாகவேனும் பரம்பரை யாகவேனும் புருஷார்த்த உபயோகியாய் வேதோபகரணங்களாய பிரஸ்தானங்களின் பேதமேதரிசிப்பிக்கப் பட்டது.

ஆதலின், குறைவென்னும் ஆசங்கைக் கிடமே யின்று. பாலர்களுடைய வியுத்பத்தியின் பொருட்டுச் சுருக்கமாக இந்தப் பிரஸ்தானங்களின் ஸ்வரூபபேத ஏதுப் பிரயோஜனங்களின் பேதம் கூறப் படுகிறது. ஆண்டுத்தருமத்தையும் பிரஹ்மத்தையும் பிரதிபாதிப்பதாயும் அபௌருஷேயமாயும் பிரமாணவாக்கியமாயும் இருப்பது **வேதம்**. அதுவும் மந்திரப் பிராஹ்மண வடிவினதாம்.

ஆண்டு அனுஷ்டான காரண பூதமாய திரவிய தேவதைகளைப் பிரகாசிப்பன **மந்திரங்கள்**. அவையும், இருக்கு, யசுர், சாம பேதத்தால் மூவகையினவாம். ஆண்டு, பாதங்களாற் கட்டப்பட்ட காயத்ரியாதிச் சந்த விசிஷ்டங்கள், இருக்குகள்; "அக்னிமீளே புரோ

ஹிதம்" என்றற்றொடக்கத்தனவாம். கீதவிசிஷ்டங்களாய அவையே சாமங்கள். அவ்விரண்டினும் வேறாயவை யசுர்க்கள். "அக்னீத் அக்னீன் விஹர" என்றற்றொடக்கத்துச் சம்போதன (விளி) ரூபங்களாய மந்திரங்களும் நிகதமந்திரங்களும் யசுரிலடங்கினவே. இவ்வாறு மந்திரங்கள் நிரூபிக்கப்பட்டன.

பிராஹ்மணமும், விதிவடிவம், அர்த்தவாத வடிவம், அவ்விரண்டின் வேறாயது என மூவகைத்து. ஆண்டுப் பாட்டர்கள் சப்த பாவனையை விதி யென்பர். பிராபாகரர்கள் நியோகத்தை விதி யென்பர். தார்க்கிகாதியர் இஷ்ட சாதனத் தன்மையை விதி யென்பர். சர்வ விதிகளும் உற்பத்தி அதிகாரம் விநியோகம் பிரயோகம் என்னும் பேதத்தால் நான்குவகையேயாம். ஆண்டு, தேவதைகர்மங்களின்வடிவமாத்திரத்தைப்போதிப்பிக்கும்விதி உற்பத்திவிதி. "அக்கினி சம்பந்தமான எட்டுக்கபாலமிருக்கிறது" என்பதாதி. இவ்வாறு செய்யத்தக்கது என்பதோடு கூடிய கரணமாகிய யாகாதிகட்குப் பல சம்பந்தத்தைப் போதிப்பிக்கும்விதி அதிகார விதியாம். "தர்ஸபூர்ண மாசங்களால் சுறக்க காமன் வேட்கக் கடவன்" என்பதாதி, அங்கசம்பந்தத்தைப் போதிப்பிக்கும் விதி விநியோக விதி. "நெற்

களால் வேட்கக்கடவன்" "சமித்தால் வேட்கின்றான்" என்றற்றொடக்கத்தன; அங்கசகிதப் பிரதானகர்மப்பிரயோக ஐக்கியத்தைப் போதிப்பிக்கும் முன்னைய மூவிதியின் சேர்க்கை வடிவமாயவிதி பிரயோக விதி.

அதுவும்:—ஸ்ரௌதம் என்றொன்றும் கர்ப்யம் என்றுமற்றொன்றுமாம். கர்மஸ்வரூபமும்: குணகர்மமும் அர்த்தகர்மமும் என இருவகைத்து. ஆண்டுக் கிருதுகாரகங்களை யாசரித்து விதிக்கப்பட்டது குணகர்மம். அதுவும் உற்பத்தி ஆப்தி விகிருதி சம்ஸ்கிருதி யென்னும் பேதத்தால் நால்வகைத்து. ஆண்டு, "வசந்தத்தில் பிராஹ்மணன் அக்கினியை ஸ்தாபிக்கக்கடவன்." "யூபத்தைச் செதுக்குகின்றான்" என்றற்றொடக்கத்தனவற்றுள், ஸ்தாபனம் செதுக்குதல் முதலியவற்றால் சம்ஸ்கார விசேஷ விசிஷ்ட அக்கினி யூபாதிகட்கு உற்பத்தி. "சுவாத்யாய மத்யயனம் செய்யவேண்டும்". "பசுவினின்றும் பாலைக்கறக்கின்றான்" என்றற்றொடக்கத்தனவற்றுள் அத்யயனம் கறத்தல் முதலிய வற்றால் இருப்பதாகிய சுவாத்தியாயம் பால் முதலானவற்றிற்கே பிராப்தி (அடைவு). "சோமத்தைப் பிழிகின்றான்" "நெற்களைக் குத்துகின்றான்" "நெய்யை விலாபிக்

கின்றான்'' என்றற்றொடக்கத்தனவற்றுள் பிழிதல் குத்தல் விலாபித்தல் முதலியவற்றால் சோமாதிகளினது விகாரமாம். "நெற்களைப் புரோக்ஷிக்கின்றான்" "பத்தினி பார்க்கின்றாள்" என்பதாதியில் புரோக்ஷண அவேக்ஷணாதியால் நெல்முதலிய திரவியங்கட்குச் சம்ஸ்காரம். இந்நான்கு மங்கமே. அவ்வாறே கிருது காரகங்களை யாசிரித்து விதிக்கப்பட்ட அர்த்தகர்மம் அங்கம்எனவும் பிரதானம் எனவும் இருவகைத்து. அன்யார்த்தமாவது அங்கம், அனன்யார்த்தமாவது பிரதானம். அங்கமும், சந்நிபத்யோப காரகமெனவும் ஆராதுப காரகமெனவும் இருவிதமாம். அவற்றுள், பிரதானஸ்வரூப நிர்வாஹஞ்செய்வது முதலது; பலோபகாரியாவது இரண்டாவது. இவ்வாறே சம்பூர்ண அங்கசகித விதி பிரகிருதியாம். குறைந்த அங்கத்தோடு கூடிய விதி விகிருதி. இவ்விரண்டின் வேறாயவிதி தர்வி ஓமமாம். இவ்வாறே மற்றது மூகித்துக்கொள்ளத் தக்கது. இவ்வாறு விதிபாகம் நிரூபிக்கப்பட்டது.

பிராபஸ்த்யம் நிந்தை என்னும் இரண்டனுள் ஒன்றில் இலக்ஷணையால் விதி விசேஷ வடிவமாய வாக்கியம் அர்த்தவாதமாம். அதுவும்:—குணவாதம், அனுவாதம், பூதார்த்தவாதம்என மூவகைத்து. அவற்றுள், வேறுபிர

மாணங்களுக்கு விருத்தமாய அர்த்தத்தைப் போதிப்பது குணவாதம். "ஆதித்தன்யூபம்" என்பதாதி. வேறு பிரமாணத்தாற் பிராப்தமான அர்த்தத்தைப் போதிப்பது அனுவாதம். "அக்கினி இமத்திற்கு மருந்து" என்பதாதி. வேறு பிரமாணத்தால் விரோதமும் அதனுற் பிராப்தியும் இன்றி அருத்தத்தைப் போதிப்பது பூதார்த்தவாதம்; "இந்திரன் விருத்திரன் பொருட்டு வஜ்ஜிரத்தை ஏவினன்" என்பதாதி. "விரோதமாங்கால் குணவாதமாம்; நிச்சயமாங்கால் அனுவாதமாம்; அவ்விரண்டு மின்மையாற் பூதார்த்த வாதமாமென்று அர்த்தவாதம் மூவிதமாகச் சம்மதம்" என்றுகூறப்பட் டிருக்கிறது. ஆண்டு, மூவித அர்த்தவாதங்கட்கும் விதி ஸ்துதி பரத்வம் சமானமாயினும், பூதார்த்தவாதத்திற்குத் தேவதா அதிகரண நியாயத்தால் தனதர்த்தத்திலும் பிராமாணியம் உண்டு. பாதிக்கப்படாததாயும் அறியப்படாததாயுமுள்ள அர்த்தத்தை யறிவிக்குந்தன்மை பிராமாணியமாம். அதுவும், பாதிக்கப்பட்ட அறியப்பட்ட விடயங்களோடு கூடியிருத்தலால் குணவாத அனுவாதங்களில் இன்று. தனதர்த்தத்தில் தாற்பரிய மின்றியதாயினும் பூதார்த்த வாதத்திற்குச் சுபாவ

மாகிய பிராமாணியங் கெடுவதில்லை. இவ்வாறு அர்த்த வாதபாகம் நிரூபிக்கப் பட்டது.

அர்த்தவாதம் விதிபாகம் என்னும் இரண்டினும் விலக்ஷணமாயது வேதாந்த வாக்கியம். அதுவும்அறியாததை அறிவிப்பினும் அனுஷ்டானத்தைப் பிரதிபாதியாமையின்விதியன்று. தன்னுற் புருடார்த்த பரமாநந்த ஞானவடிவமான பிரஹ்மமாகிய சுவார்த்தத்தின்கண் உபக்கிரம உபசங்காராதி ஆறுவித தாற்பர்ய லிங்கமுடைமையானே தன்னுற் பிரமாண பூதமாய சர்வவிதிகளையும்அந்தக்கரண சுத்தி வாயிலாகத் தனக்கு அங்கமாகச்செய்துகொண்டு அன்னியத்திற்குத்தான் அங்கமாகாமையால் அர்த்தவாதமன்று. ஆதலால்இவ்விரண்டன் வேறதே வேதாந்த வாக்கியம். அதுவும் சிலவிடத்தில் அறியாததை அறிவிக்கு மாத்திரத்தால் விதியென்று உபதேசிக்கப்படுகின்றது. விதிபத மின்றேனும் பிரமாண வாக்கியத்தன்மை யுண்மையாலேயே சிலவிடத்துப் பூதார்த்தவாதமென்று வியவகரிக்கப்படுகின்றது எனத் தோஷமின்று. இங்ஙனம் பிராஹ்மணமும் மூவகைத்தென நிரூபிக்கப்பட்டது.

இவ்வாறு கர்ம காண்ட பிரஹ்ம காண்ட வடிவமான வேதம் தர்மார்த்த காம மோக்ஷ ஏது

வாம். அதுவும் முப்பிரயோகத்தால் யாக நிர்வாகத்தின்பொருட்டு இருக்கு யசுர் சாமபேதத்தால் பின்னமாம். ஆண்டு இருக்குவேதத்தால் ஹோதாவின் சம்பந்தமான பிரயோகமும், யசுர்வேதத்தால் அத்வர்யு சம்பந்தமான பிரயோகமும், சாமவேதத்தால் உத்காதாவின் சம்பந்தமான பிரயோகமும் ஆம். பிரஹ்மா சம்பந்தமான பிரயோகங்களும் யஜமான சம்பந்தமான பிரயோகங்களும் இதிலேயே அடக்கமாம். அதர்வண வேதமோ யாகத்தில் உபயோகப்படாவிடினும் சாந்திக பௌஷ்டிக அபிசாரிகாதி கர்மப்பிரதிபாதகத் தன்மையானே அத்யந்த விலக்ஷணமேயாம். இங்ஙனம், பிரவசனபேதத்தால் வேதந்தோறும் பின்னமாய அநந்த சாகைகள் உள. இவ்வாறே, கர்மகாண்டத்தில் சகல வேத சாகைகளுக்கும் வியாபாரபேத மிருப்பினும் பிரஹ்மகாண்டத்தில் ஏக ரூபத்வமேயாம் எனப் பிரயோஜன பேதத்தால் நான்கு வேதங்கட்கும் பேதம் கூறப்பட்டது.

அங்கங்களுக்குப் பிரயோஜனங் கூறப்படுகிறது:—ஆண்டு, உதாத்த அநுதாத்த ஸ்வரித ஹ்ரஸ்வ தீர்க்க ப்லுதாதி விசிஷ்டமாய உயிர் மெய்வடிவ வர்ண

உச்சாரண விசேஷ ஞானம் சிக்ஷைக்குப் பிரயோசனமாம். அஃதின்றேல், மந்திரங்கட்கு அனர்த்தகத்தன்மை யுண்மையின், அங்ஙனமே "ஸ்வரத்தாலும் வர்ணத்தாலு மீனமான மந்திரமானது மித்தியா ப்ரயுக்தமாய் அவ்வர்த்தத்தைக் கூறுவதில்லை. அவ்வாக்கான வஜ்ஜிரமானது யஜமானனைக் கொல்லுகின்றது. எங்ஙனம், ஸ்வரத்தினது அபராதத்தால் "இந்திரசத்ரு" என்று (சிக்ஷை 52) சொல்லப்பட் டிருக்கிறது. ஆண்டுச் சிக்ஷை சர்வவேத சாதாரணமாம். "இனிச் சிக்ஷையை இயம்புகின்றேன்" என்றற்றொடக்கத்தன † பஞ்சகண்டவடிவமாகப் பாணினியாற் பிரகாசிப்பிக்கப் பட்டன. வேத சாகை தோறும் பின்னரூபங்களாய்ப் பிராதி சாக்யமெனப் பெயரியவைகள் அன்னிய முனிகளாலேயே தரிசிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்பிரகாரம், வைதிகபதசாதுத்வஞானத்தால் ஊகாதிகள் வியாகரணத்திற்குப்பிரயோஜனமாம். அதுவும் " வ்ருத்திராதைச் " என்றற்றொடக்கத்து எட்டு அத்யாய வடிவமாக மஹேஶ்வரப் பிரசாதத்தால் பகவானாகிய பாணினி முனிவராலேயே பிரகாசிப்பிக்கப்பட்டது. ஆண்டு, காத்யாயன முனிவரால் பாணி

† நவகண்டமென்றும் பாடமுண்டு.

னீய சூத்திரத்தின்மேல் வார்த்திகம் செய்யப்பட்டது. அதுபோல் வார்த்திகத்தின் பேரிலும் பகவானாகிய பதஞ்சலிமுனிவராலும் மகாபாஷ்யம் செய்யப்பட்டது. அந்த இம் மும்முனி யிலக்கணம் வேதாங்கமாம், மாஹேஶ்வரமென்று சொல்லப்படுகிறது. கௌமாராதி வியாகரணங்களோ வேதாங்கங்களன்று; மற்றோ, லௌகிகப்பிரயோக மாத்திர ஞானத்தின் பொருட்டாவனவென் றறியத்தக்கனவாம். இந்தப்பிரகாரம் சிக்ஷை வியாகரணங்களால் வர்ணோச்சாரணமும் பத சாதுத்வமும் அறிந்தபொழுது வைதிக மந்திர பதங்களினது அர்த்தஞானவேட்கையுண்டாயின், அதன்பொருட்டுப் பகவானாகிய யாஸ்கரால் "சமாம்நாயஃ ஸமாம்நாதஃ (அது வியாக்யானம் செய்யத்தக்கது)" என்றற்றொடக்கத்துப் பதின்மூன்றத்தியாய வடிவமாக நிருக்தம் செய்யப்பட்டது; ஆண்டும் (அதன் கண்ணும்) நாமம், ஆக்யாதம், நிபாதம், உபசர்க்கம் என்னும் பேதத்தால் நான்குவிதப் பதசமுதாயத்தை நிரூபித்து வைதிக மந்திரங்களினது பதங்களினர்த்தங்கள் தரிசிப்பிக்கப்பட்டன. மந்திரங்கட்கும் அனுஷ்டேயார்த்தப் பிரகாசவாயிலாகவே காரணத்தன்மை யுண்மையின் வாக்கியார்த்த ஞானத்திற்குப் பதார்த்த ஞானாதீனத்தன்மை

யுண்மையானும், மந்திரத்திலுள்ள பதார்த்த ஞானத்தின்பொருட்டு நிருக்தம் அவசியம் அபேக்ஷிக்கப்பட்டதாம்; அன்றேல், அனுஷ்டான சம்பவ மின்மையின்; "ஸ்ருண்யேவ ஜர்ப்பரீ துர்ப்பரி தான" என்றற்றொடக்கத்து அதிதுக்கத்தாலும் ஊகிக்கத்தகா தனவானவற்றிற்குப் பிரகாராந்தரத்தால் (வேறுவகையால்) அர்த்த ஞானத்தினதுசம்பவமின்மையான். இங்ஙனம், வைதிகத் திரவ்ய தேவதாத்மகபதார்த்த பர்யாயபத வடிவமான நிகண்டு முதலியனவும் நிருக்தத்தின்கண் அடங்கினவையேயாம். அதனினும், ஐந்து அத்தியாய வடிவமாய் நிகண்டென்னும் பெயரிய கிரந்தமானது பகவானாகிய யாஸ்கராலேயேசெய்யப்பட்டது. அமரஹேமச்சந்த்ராதியராற்செய்யப்பப்பட்ட அன்னிய சர்வகோசங்களும் நிகண்டு ரூபத்தன்மையானே நிருக்தத்தில் அடங்கினவையென்று காணத்தக்கது. இங்ஙனம், இருக்குமந்திரங்கட்குப் பாதபத்த சந்தவிசேஷ விசிஷ்டத்தன்மை யுண்மையின், அதனை யறியாவிடின் நிர்ந்தையின் சிரவணத்தாலும், சந்த விசேஷ நிமித்த அனுஷ்டான விசேஷத்தாலும், சந்தஞான வேட்கை உண்டாயின் அது பிரகாசிக்கும் பொருட்டு "கீஸ்ரீஸ்த்ரீம்" என்றற்றொடக்கத்து அஷ்டாத்யாய வடிவமான சந்தவிசிதி பகவானு

கிய பிங்கல நாகத்தாற் செய்யப்பட்டது. அவற்றுள், "அதலௌகிகம்" என்பதீருய மூன்றத்தியாயத்தால் க்காயத்திரி, உஷ்ணிக், அனுஷ்டுப், ப்ருஹதி, பங்க்தி, த்ரிஷ்டுப், ஜகதீ என ஏழு உட்பிரிவுகளோடு கூடிய சர்வசந்தங்களும் பிரசங்கத்தா னிரூபிக்கப் பட்டன. "அதலௌகிகம்" என ஆரம்பித்து ஐந்து அத்யாயங்களாற் புராண இதிகாசாதிகளிற் பயன்படும் லௌகிக சந்தங்கள் பிரசங்கத்தால் நிரூபிக்கப்பட்டன; வியாகரணத்தில் லௌகிகபத நிரூபணம் போல. இந்தப்பிரகாரம்,வைதிக கர்மாங்கமாய தர்ஸாதி காலஞானத்தின் பொருட்டுச் சோதிடம் பகவானுகிய ஆதித்தனுலும் கர்க்காதிகளாலும் பலவிதமாகச் செய்யப்பட்டுளது. இவ்வாறே சாகாந்தரீய குணோபசங்காரத்தால்வைதிக அனுஷ்டானக்கிரம விசேஷ ஞானத்தின் பொருட்டுக் கற்ப சூத்திரங்கள் (செய்யப்பட்டன): அவையும் பிரயோகபேதத்தால் மூவிதமாம். அவற்றுள்,ஹௌத்ரப் பிரயோகப்பிரதிபாதகங்கள், ஆஸ்வலாயன சாங்காயனுதிகளாற் செய்யப்பட்டன. ஆத்வர்யவப் பிரயோகப் பிரதிபாதகங்கள், பௌத்தாயன, ஆபஸ்தம்ப காத்யாயனுதிகளாற் செய்யப்பட்டன. ஔத்காத்ரப் பிரயோகப்

பிரதிபாதகங்கள் * லாட்யாயன திராஹ்வ்யாய ணாதிக ளாற் செய்யப்பட்டன. இவ்வாறு ஆறு அங்கங்களின் பிரயோஜன பேதம் நிரூபிக்கப்பட்டது.

நான்கு உபாங்கங்களுக்குப் பிரயோஜனம் இப்பொழுது சொல்லப்படும். அவற்றுள், சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மன்வந்தரம், வம்சாநுசரிதம் என்னுமிவற்றைப் பிரதிபாதிப்பனவான புராணங்கள் பகவானாகிய வாதராயண முனிவரால் செய்யப்பட்டன.

அவையும், ப்ராஹ்மம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பவிஷ்யம், ப்ரஹ்மவைவர்த்தம், லிங்கம், வாராஹம், ஸ்காந்தம், வாமநம், கௌர்மம், மாத்ஸ்யம், காருடம், ப்ரஹ்மாண்டம் எனப் பதினெட்டாம். "வேதவித்துக்களிற்சிறந்தோர்களே! முதலாவது சனற்குமாரராற் செய்யப்பட்டது, இரண்டாவது நாரசிம்மம் என்னும் பெயரது, மூன்றாவது நாந்தமேயாம், நான்காவது சிவதர்மம் என்னும் பெயரது, ஐந்தாவது தௌர்வாசம் என்றறிவர், ஆறாவது நாரதீயமெனப் பெயரி

* லாஹ்யாயன, த்ராஹ்யாயண அல்லது வ்ரீஹ்யாயண, என்றும் பாடம்;

யது, காபிலம் ஏழாவதென்றறிவர், எட்டாவது மானவம் எனச்சொல்லப்பட்டது, ஒன்பதாவது உசனுவாற் சொல்லப்பட்டது, பத்தாவது பிரஹ்மாண்ட மெனப் பெயரியது, பதினொன்ருவது வாருணமெனப் பெயரியது, பன்னிரண்டாவது காலி (காளீ) புராணமெனப் பெயரியது, பதின்மூன்ருவது முனிபுங்கவர்களே! வாசிஷ்டமாம், பதினுன்காவது வாசிஷ்டம் லைங்கம் எனப் பெயரியது, பதினைந்தாவது மாஹேஸ்வரம் என்று சொல்லப்பட்டது, பதினுருவது சாம்பபுராணமெனப் பெயரியது, பதினேழாவது மஹாற்புதமாய சௌரம் ஆம், பதினெட்டாவது பாராசரம் என்று சொல்லப்பட்டது, பத்தொன்பதாவது மாரீசம் எனப் பெயரியது, இருபதாவது பார்க்கவம் எனப்பெயரிய சர்வதர்மார்த்தகமாயது சொல்லப்பட்டது". இந்தப் பிரகாரம் உபபுராணங்கள் அநேகப் பிரகாரங்களாகக் காணத் தக்கனவாம்.

ஐந்தத்தியாய வடிவமான நியாய ஆன்வீக்ஷிகீயானது கௌதமரால் செய்யப்பட்டது. உத்தேச லக்ஷணப் பரீக்ஷைகளால் பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோஜனம், திருஷ்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், ஜல்பம், விதண்டை, ஏத்வா

பாசம், சலம், ஜாதி, நிக்ரஹஸ்தானம் எனப் பெயரிய பதினாறு பதார்த்தங்களினுடைய தத்துவஞானம் அதன் பிரயோஜனமாம். இங்ஙனமே, பத்தத்தியாயம் பொருந்திய வைசேஷிக சாஸ்திரம் கணாதராற் செய்யப்பட்டது. சாதர்மிய வைதர்மியங்களால்அபாவத்தை ஏழாவதாகவுடைய திரவ்ய குண கர்ம சாமான்ய விசேஷ சமவாயமென்னும் ஆறுபாவ பதார்த்தங்களின் பிரதிபாதனம் அதன் பிரயோஜனமாம். இதுவும் நியாய பதத்தாற் கூறப்பட்டது. இவ்வாறு கர்மமீமாம்சையும் சாரீரகமீமாம்சையுமென மீமாம்சையும் இருவகைத்தாம். அவற்றுள், கர்மமீமாம்சை பன்னிரண்டத்தியாயமுடையது; "அதாதோ தர்ம ஜிஜ்ஞாசா:" என்பதுமுதலாக "அன்வாஹார்யேச தர்ஸனாத்" "என்பதீறாகப் பகவானாகிய ஜைமினியால் கூறப்பட்டது. (1) தர்மப்பிரமாணம், (2) தர்ம பேதாபேதங்கள், (3) சேஷ சேஷிபாவம், (4) கிருத்வர்த்த புருஷார்த்த பேதத்தாற் பிரயுக்தி விசேஷம், (5) சுருத்யர்த்த பாடனாதிக் கிரமபேதம், (6) அதிகார விசேஷம், (7) சாமான்யாதிதேசம், (8) விசேஷாதிதேசம், (9) ஊகம், (10) பாதம், (11) தந்திரம், (12) பிரசங்க மென்பன கிரமமாகப் பன்னிரண் டத்தியாயங்களி னருத்தமாம். எனவே, நான்கு அத்யாயவடிவமான சங்கர்ஷண காண்டமும்

ஜைமினி முனிவராற் செய்யப்பட்டது. அதுவும் தேவதாகாண்டப் பெயராற் பிரசித்தமா யிருப்பினும், உபாசனை யெனப் பெயரிய கர்மத்தைக் கூறலாற் கர்மமீமாம்சையி லடக்கமேயாம். அங்ஙனம் நான் கத்தியாய வடிவமாய சாரீரகமீமாம்சை "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாசா" என்பது முதலாக "அநாவ்ருத்திஃ சப்தாத்" என்பதீறாக, ஜீவப்ரஹ்மைக்கிய சாக்ஷாத்கார ஏதுவான சிரவணமெனப் பெயரியவிசாரத்தைக்கூறும் நியாயங்களைத் தரிசிப்பிப்பதாய்ப் பகவானாகிய வாதராயணராற் செய்யப்பட்டது. ஆண்டு, சர்வவேதாந்தங் கட்கும் சாக்ஷாத்தாகவாவது பரம்பரையாகவாவது பிரத்யக்கபின்ன அத்விதீயப் பிரஹ்மத்தின்கண் தாத்பர்யம் என்னும் சமன்வயம் முதலத்தியாயத்தாற் றரிசிப்பிக் கப்பட்டது. அதன் கண்ணும் முதற்பாதத்தில்ஸ்பஷ்ட ப்ரஹ்மலிங்க யுக்த வாக்கியங்கள் விசாரிக்கப்பட்டன. இரண்டாவது பாதத்திலோ உபாஸ்ய ப்ரஹ்ம விஷய மாய அஸ்பஷ்ட பிரஹ்மலிங்க யுக்தவாக்கியங்கள் விசாரிக்கப்பட்டன. மூன்றாவது பாதத்திற் பெரும் பான்மையும் ஞேய ப்ரஹ்ம விஷயமாய அஸ்பஷ்ட ப்ரஹ்மலிங்க யுக்த வாக்கியங்கள் விசாரிக்கப்பட்டன. இங்ஙனம் முப்பாதத்தால் வாக்கியவிசாரம் சமாப்தி

செய்யப்பட்டது. நான்காவது பாதத்திலோ பிரதான விஷயமாகச் சம்சயிக்கப்பட்ட அவ்யக்த அஜாதிபதங்கள் சிந்திக்கப்பட்டன. இங்ஙனம், வேதாந்தங்கட்கு அத்வைத ப்ரஹ்மத்தின்கண் சமன்வயம் சித்திக்குங்கால் ஆண்டுச் சம்பவிக்கப்பட்ட ஸ்மிருதி தர்க்காதி விரோதத்தை ஆசங்கித்து அதன் பரிகாரம் செய்யப்படுகின்றதென்னும் அவிரோதம் இரண்டாவதத்தியாயத்தாற் றரிசிப்பிக்கப்பட்டது. அதன் முதற்பாதத்தில் சாங்கிய யோக காணாதாதி ஸ்மிருதிகளாலும் சாங்கியாதிப் பிரயுக்த தர்க்கங்களாலும் உளவாம் விரோதம் வேதாந்த சமன்வயத்திற்குப் பரிகரிக்கப்பட்டது. இரண்டாவது பாதத்தில் சாங்கியாதி மதங்களினது துஷ்டத்வம் பிரதிபாதிக்கப்பட்டது; விசாரத்திற்குச் சுவபக்ஷ ஸ்தாபன பரபக்ஷ நிராகரண ரூப பக்ஷத்வய வடிவமுடைமையின். மூன்றுவது பாதத்தில் மகாபூத சிருஷ்டியாதி சுருதிகட்குப் பரஸ்பரம் விரோதம் பூர்வ பாகத்தாற் பரிகரிக்கப்பட்டது. உத்தரபாகத்தாலோ ஜீவ விஷய சுருதிகளினது பரஸ்பர விரோதம் பரிகரிக்கப்பட்டது. நான்காவது பாதத்தில் இந்திரியாதிவிஷய சுருதிகளினது விரோத பரிகாரம் (காட்டப்பட்டது). மூன்றுவதத்தியாயத்தில் சாதனநிரூபணம் (செய்யப்

பட்டது). அதன் முதற்பாதத்தில் ஜீவனுக்குப் பரலோக கமன நிரூபணத்தால் வைராக்யம் நிரூபிக்கப்பட்டது. இரண்டாவது பாதத்தில் பூர்வபாகத்தால் துவம் பதார்த்தம் சோதிக்கப்பட்டது. உத்தரபாகத்தாலோ தத்பதார்த்தம் (சோதிக்கப்பட்டது). மூன்றாவதுபாதத்தில் நிர்க்குண ப்ரஹ்மத்தின்கண் நாநாசாகைகளிற் படிக்கப்பட்ட புனருக்த பதோப சங்காரம் செய்யப்பட்டது. பிரசங்கத்தால் சகுணவித்தைகளில் சாகாந்தரீய குண உபசங்கார அனுப சங்காரங்கள் நிரூபிக்கப்பட்டன. நான்காவது பாதத்தில், நிர்க்குண ப்ரஹ்ம வித்தைக்குப் பகிரங்கசாதனங்களாகிய ஆச்ரம தர்மயஞ்ஞ தானுதிகளும் அந்தரங்க சாதனங்களாகிய சமதம நிதித்தியாசனுதிகளும் நிரூபிக்கப்பட்டன. நான்காவதத்தியாயத்திற் சகுண நிர்க்குண வித்தைகளின் பல விசேஷ நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் முதற் பாதத்தில் சிரவணுதி ஆவிருத்தியால் நிர்க்குண ப்ரஹ்மத்தைச் சாக்ஷாத்காரஞ் செய்து ஜீவிப்பவனுக்குப் புண்ணிய பாப அலேபவடிவமான ஜீவன்முக்தி சொல்லப்பட்டது. இரண்டாவது பாதத்தில் மாணமடைந்தோனுக்கு உத்க்ராந்திப் பிரகாரம் சிந்திக்கப்பட்டது. மூன்றாவது பாதத்தில் சகுண ப்ரஹ்மத்தை யறிந்திறந்தோ

னுக்கு உத்தரமார்க்கம் சொல்லப்பட்டது. நான்காவது பாதத்தில் பூர்வபாகத்தால் நிர்க்குண ப்ரஹ்மவித்துக்கு விதேக கைவல்யப் பிராப்தி சொல்லப்பட்டது. உத்தர பாகத்தால் சகுணப் பிரஹ்மவித்துக்குப் பிரமலோக ஸ்திதிசொல்லப்பட்டது; இதுவே சகல சாஸ்திரங்கட்குச்சிரமாயது. அன்னியசகலசாஸ்திரங்களும் இதற்கே அங்கபூதமாம். இதுவே முமுட்சுக்களால்ஸ்ரீசங்கரபூஜ்ய பகவத்பாத ஆசார்ய ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பிரகாரம்ஆதரிக்கத் தக்கதென்பது இரகசியம். இங்ஙனம், மனு யாஞ்ஞவல்க்ய விஷ்ணு யமா அசங்கிரா வசிஷ்ட தக்ஷசம்வர்த்த சாதாதப பராசர கௌதம சங் கலிகித ஹாரீதஆபஸ்தம்ப உசனுவியாசகாத்யாயன ப்ர ஹஸ்பதி தேவல நாரத பைடீனசி முதலாயினோரால் விபாகமாக வருணாஶ்ரம தர்மங்களுடைய பிரதிபாதகங் களாகிய தர்ம சாஸ்திரங்கள் செய்யப்பட்டன. இங்ஙனம் வியாசராற் செய்யப்பட்ட மகாபாரதமும் வால்மீகராற் செய்யப்பட்ட இராமாயணமும் தர்ம சாஸ்திரத்திலேயே அடக்கமா மென்பது ஸ்பஷ்டம்; இதிகாசத் தன்மை யாமென பிரசித்தம்.

நான்கு வேதங்கட்கும் கிரமமாக நான்கு உபவேதங்களுள. அவற்றுள், ஆயுள்வேதத்திற்குச் சூத்திரம்

சாரீரம் ஐந்திரியம் சிகிச்சை நிதானம் விமானம் கல்பம் சித்தியென எட்டுத்தானங்கள் இருக்கின்றன. இது ப்ரஹ்ம பிரசாபதி அஸ்வி தன்வந்திரி இந்திர பரத்வாஜ ஆத்ரேய அக்னிவேசி முதலாயினோரால் அருளப்பட்டது; சரகரென்பவரால் சங்கிரகிக்கப்பட்டது. அதனுள்ளேயே சுசுருதர் என்பவரால் பஞ்சஸ்தான வடிவமான பிரஸ்தானந்தரம் செய்யப்பட்டது. இவ்வணமே வாக்பட்டாதியராலும் பலவிதம் (செய்யப்பட்டன); ஆனால், சாஸ்திரபேதமின்று. காமசாஸ்திரமும் ஆயுள்வேதத்திலடக்கமேயாம். சுசுருதரால் வாஜிகரணம் என்னும் பெயரிய காமசாஸ்திரம் சொல்லப்பட்டது. ஆண்டு வாத்ஸ்யாயனரால் ஐந்தத்தியாய வடிவமான காம சாஸ்திரம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கும் விஷயவைராக்யமே பிரயோஜனமாம்; சாஸ்திரத்திற் பிரகாசிப்பித்த மார்க்கத்தினாலும் விஷயபோகத்தில் துக்கமாத்திரம் முடிவுபேறுடைத்தாதலின். சிகிச்சா சாஸ்திரத்திற்கும் ரோகம், அதன் சாதனம், ரோகநிவிர்த்தி, அதன் சாதனம் ஞானம் என்பன பிரயோஜனமாம்.

இவ்வண்ணம் தனுர்வேதம் நான்கு பாத வடிவுடைத்து; விஸ்வாமித்திரராற் செய்யப்பட்டது.

அதில் முதலாவது தீக்ஷாபாதம், இரண்டாவது சங்க்ரஹ பாதம், மூன்றாவது சித்தி பாதம், நான்காவது பிரயோக பாதம். அவற்றுள், முதற்பாதத்தில், தனுவினிலக்கணங்கூறி அதிகாரி நிரூபணம் செய்யப்பட்டது. ஆண்டுத்தனுவென்னுஞ்சப்தம்வில்லின்கண் † ரூடமாயினும் நான்குவித ஆயுத வாசகமாக இருக்கின்றது. அவை முக்தம், அமுக்தம், முக்தா முக்தம், யந்திர முக்தம் என்பனவாம். அவற்றுள், சக்கிர முதலியன முக்தம்; கட்கம் முதலியன அமுக்தம், சல்லிய அவாந்தரபேத முதலியன முக்தா முக்தம், யந்திரமுக்தம் சரமுதலியன. அவற்றுள், முக்தம் அஸ்திரம் என்று சொல்லப்படும், அமுக்தம் சஸ்திரம் என்று சொல்லப்படும்; அதுவும் ப்ராஹ்ம, வைஷ்ணவ, பாசுபத, பிராஜாபத்ய ஆக்னேய முதலிய பேதத்தால் அநேகவிதமாம். அதி தெய்வங்களோடும் மந்திரங்களோடும் கூடிய நான்குவித ஆயுதங்களிலும் எந்த க்ஷத்திரிய குமாரர்களுக்கும் அவரனுயாயிகட்கும் அதிகாரமுண்டோ அவர்யாவரும் பதாதி ரதகஜ துரங்காரூடர் என நான்குவகையினராவர். தீக்ஷாபிடேகசகுன மங்கலகரணாதிகளாகியவெல்லாம் முதற் பாதத்தில் நிரூபிக்கப்பட்டன.

---

† இடுகுறியாயினும்.

இரண்டாவது பாதத்தில், சகல சஸ்திர விசேஷங்களினுடைய சங்கிரகணப் பிரகாரம் ஆசாரியருடைய இலக்ஷண வாயிலாகத் தரிசிப்பிக்கப் பட்டது.

மூன்றாவது பாதத்தில், குருசம்பிரதாயசித்த சஸ்திர விசேஷங்களினுடைய அடிக்கடி அப்பியாசமும் மந்திரதேவதைகளின் சித்திகரணமும் நிரூபிக்கப்பட்டன.

நான்காவது பாதத்தில், இவ்வண்ணம் தேவதார்ச்சனைப்யாசாதிகளால் சித்தமான அஸ்திர விசேஷங்களினுடைய பிரயோகம் நிரூபிக்கப்பட்டது.

க்ஷத்திரியர்களுடைய சுவதர்மாசரணம் யுத்தம். துஷ்ட சத்துரு சோராதிகளினின்றும் பிரஜாபாலனஞ் செய்தல் தனுர்வேதத்திற்குப் பிரயோஜனம் என இவ்வணணம் ப்ரஹ்மபிராஜாபத்யாதிக் கிரமத்தால் விஸ்வாமித்திரராற் செய்யப்பட்டது தனுர்வேதசாஸ்திரமாம். இங்ஙனம் பரதரால் காந்தர்வவேதசாஸ்திரம் செய்யப்பட்டது; அதில் நிருத்திய கீத வாத்திய பேதத்தால் அநேகவித அர்த்தம் விரிக்கப்பட்டிருக்கின்றன. தேவதாராதனமும் நிர்விகல்ட சமாதியாதி சித்தியும் காந்தர்வவேதத்தினுடையபிரயோஜனமாம். இவ்வண்ணம் அர்த்

தசாஸ்திரமும் நீதிசாஸ்திரம் அஸ்வசாஸ்திரம் கஜசாஸ்திரம் சில்ப சாஸ்திரம் பாக சாஸ்திரம் அறுபத்தி நான்கு கலாசாஸ்திரம் எனப் பலவிதமாம். (சைவாகமங்களிற் கூறப்பட்ட அவ்வறுபத்து நான்கு கலை ஞானங்களாவன:—கீதம் (1) வாத்யம் (2) நிருத்யம் (3) நாட்யம் (4) ஆலேக்யம் (5) விசேஷகச் சேத்யம் (6) தண்டுலகு சுமபலிவிகாரங்கள் (7) புஷ்பா ஸ்தரணம் (8) தசனவசனங்க ராகங்கள் (9) மணி பூமிகாகர்மம் (10) சயனரசனம் (11) உதகவாத்யம் (12) உதகவாதம் (13) அத்புத தர்சனவேதித்வம் (14) மாலாக்ரதன கல்பம் (15) சேகராபீட யோஜனம் (16) நேபத்ய யோகங்கள் (17) கர்ணபத்ரபங்கங்கள் (18) கந்த யுக்தி (19) பூஷண யோஜனம் (20) இந்திர ஜாலம் (21) கௌசுமார யோகங்கள் (22) ஹஸ்தலாகவம், (23) சித்திரசாகாபூப பக்ஷ விகாரக் கிரியைகள் (24) பானக ரச ராகாசவ யோஜனம் (25) சூசீவாபகர்மம் (26) சூத்ரக்ரீடை (27) வீணா டமருக வாத்தியங்கள் (28) ப்ரஹேலிகாப்ரதி மாலைகள் (29) துர்வஞ்சகயோகங்கள் (30) புஸ்தகவாசனம் (31) நாடிகாக்யாயிகாதர்ஸனம் (32) காவ்யசமஸ்யா பூரணம் (33) பட்டிகாவேத்ர பாண விகல்பங்கள் (34) தருக்ககருமங்கள் (தர்க்கு என்றும் பாடம்). (35) தக்ஷணம்

(36) வாஸ்தாதுவித்தை(37) ரூப்யரத்னப் பரீக்ஷை(38) தாதுவாதம் (39) மணிராகஞானம் (40) ஆகரஞானம் (41) விருக்ஷாயுர்வேதயோகங்கள் (42) மேஷகுக்குட லாவகயுத்தவிதி (43) சுகசாரிகாப்பிரலாபனம் (44) உத்சாதனம் (45) கேச மார்ஜன் கௌசலம் (46) அக்ஷர முஷ்டிகாகதனம் (47) மிலேசிதகவி கல்பங்கள் (48) தேச பாஷாஞானம் (49) புஷ்பசகடிகா நிமித்தஞானம் (50) யந்திரமாத்ருகா (51) தாரணமாத்ருகா (52) அசம்வாச்ய சம்பாட்யம்மான சீகாவ்யக்கிரியா விகல்பங்கள் (53) சலிதகயோகங்கள் (54) அபிதான கோசசந்தோஞானம் (55) கிரியாவிகல்பங்கள் (56) லலித விகல்பங்கள் (57) வஸ்திரகோபனங்கள் (58) த்யூதவிசேஷம் (59) ஆகர்ஷக்ரீடை (60) பாலக்ரீடனங்கள் (61) வைநாயகீவித்யாஞானம் (62) வைஜயிக வித்யாஞனம்(63) வைதலிகீ வித்யாஞானம் (64) என்பனவாம். இவை நாநாமுனிகளாற் செய்யப்பட்டன).

அவ்வெல்லா வற்றிற்கும் லௌகிக அவ்வப் பிரயோஜன பேதங்கள் காணத் தக்கன. இவ்வண்ணம் பதினெட்டு வித்தைகள் 'த்ரயீ' சப்தத்தாற் கூறப்பட்டன; அன்றேல், குறைவுத் தன்மையின் பிரசங்க மூளதாமாதலின்,

அங்ஙனம் சாங்கியசாஸ்திரம் பகவானாகிய கபில ரால் செய்யப்பட்டது. அதில் மூவகைத்துக்க அத்யந்த நிவிர்த்தி அத்யந்தபுருஷார்த்தம் என்றற்றொடக்கத்து ஆறத்தியாயங்கள் உள. அவற்றுள், முதலத்தியாயத்தில் விஷயங்கள் நிரூபிக்கப்பட்டன. இரண்டாவ தத்தியா யத்தில் பிரதான காரியங்கள்; மூன்றாவ தத்தியாயத்தில் விஷயவைராக்யம்; நான்காவது அத்தியாயத்தில் விரக் தர்களாகியபிங்கல ஆருரகுமாராதிகளது கதைகள் கூற ப்பட்டுள. ஐந்தாவ தத்தியாயத்தில் பரபக்ஷ நிர்ஜயம்; ஆறாவதில் சர்வார்த்த சங்கிரகம் (கூறப்பட்டன). பிரகிருதி புருஷ விவேக ஞானம் சாங்கிய சாஸ்திரத் தினது பிரயோஜனம். அங்ஙனம் யோக சாஸ்தி ரம் பகவானாகிய பதஞ்சலியாற் செய்யப் பட்டது. அது "அத்யோகானு சாசனம்" என்றற் றொடக்கத்துப்பாத நான்கின் வடிவிற்று. அவற்றுள், முதற்பாதத்தில் சித்த விருத்தி நிரோத வடிவமான சமாதியும் வைராக்கிய ரூபமும் அதன் சாதனமும் நிரூபிக்கப்பட்டன; இரண் டாவது பாதத்தில், விக்ஷிப்த சித்தமுடையவனுக்கும் சமாதி சித்திப்பதன் பொருட்டு யம நியம ஆசனப் பிராணயாம பிரத்தியாகார தாரணை தியான சமாதிக ளாகிய அஷ்டாங்கங்கள் நிரூபிக்கப்பட்டன; மூன்றாவது

பாதத்தில் யோகவிபூதிகள்; நான்காவது பாதத்தில் கைவல்யம் (கூறப்பட்டன). அதற்கும், விஜாதீயப்பிரத்திய நிரோதவாயிலாக நிதித்தியாசன சித்திபிரயோஜனமாம். அங்ஙனம் பசுபதிமதப் பாசுபத சாஸ்திரம்பகவானுகியபசுபதியால்பசுபாசவிமோக்ஷணத்தின் பொருட்டு "அதாதः பாசுபத யோகவிதிம் வ்பாக்யாஸ்யாமः" என்றற் றொடக்கத் தனவாக ஐந்தத்தியாயமாய்ச் செய்யப்பட்டது. அதில் அத்தியாயம் ஐந்தாலும் காரியரூப ஜீவன் பசு; காரணம்பசுபதி ஈஸ்வரன்; யோகம் பசுபதியின்கண்சித்தசமாதானம் என விதிபஸ்மத்தால் திரிஷவண ஸ்நாநாதி நிரூபிக்கப்பட்டன. துக்க நாசமெனப் பெயரிய மோக்ஷம் அதன் பிரயோஜனமாம். இவையே கார்யா காரணயோகவிதி, துக்காந்தமெனச் சொல்லப் படுகின்றன.

இவ்வாறு சைவமந்திர சாஸ்திரமும் பாசுபதசாஸ்திரத்தின் கண்ணேயே யடக்கமாமென்று காணத்தக்கது. இவ்வாறேயே வைஷ்ணவ நாரதாதிகளாற் பஞ்சராத்ரம் செய்யப்பட்டது. அதில் வாசுதேவ சங்கர்ஷண பிரத்யும்ன அனிருத்தர்கள் என நான்கு பதார்த்தங்கள் நிரூபிக்கப்பட்டன. பகவானும் பரமேஸ்வரனும் இருக்கும் வாசுதேவன் சர்வகாரணம்; அவனிடத்தி

னின்றும் சங்கர்ஷணனெனப் பெயரிய ஜீவனுண்டாகின்றனன். அவனிடத்தினின்றும் மனமென்னும் பிரத்யும்னன், அவனிடத்தினின்றும் அனிருத்தனென்னும் அகங்காரம் (உண்டாயின). இவ்வெல்லாம் பகவானாகிய வாசுதேவருடைய அம்சபூதங்களே; அவரோடும் அபின்னர்களே யாவர், என அந்த வாசுதேவருடைய ஆராதனத்தைத் திரிவித காணங்களாற் செய்து கிருத கிருத்தியனாகின்றான் என்றற் றொடக்கத்தனவும் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. இங்ஙனம், வைஷ்ணவ மந்திர சாஸ்திரம் பரிமிதமாயினும் பஞ்சாத்ர மத்திய லடக்கமாம். வாமாகமாதி சாஸ்திரமோ வேதபாகியமே யாம். இந்தப்பிரகாரம் பிரஸ்தானபேதம் தரிசிப்பிக்கப் பட்டது. யாவருக்கும் சுருக்கமாகமூவிதமே பிரஸ்தானபேதமாம். அவற்றுள், முதலாவது ஆரம்பவாதம்; இரண்டாவது பரிணாமவாதம்; மூன்றாவது விவர்த்தவாதம். பார்த்திவ ஆப்ய தைஜஸ வாயவீயமாய நான்குவித பரமாணுக்கள் துவியணுகாதிக் கிரமமாகப் பிரஹ்மாண்ட பர்யந்தமான சகத்தைத் தோற்றுவிக்கின்றன.

அசத்தே காரிய காரண வியாபாரத்தா லுற்பத்தியாகின்றது என முதலது தார்க்கிகர்க்கும் மீமாம்சகர்கட்குமாம்; சத்வ ரஜஸ்தமோகுணவடிவப்பிரதானமே மகத் அகங்காராதிக் கிரமமாக ஜகதாகாரமாகப் பரிணமிக்கின்றது. முன்னும் சூக்ஷ்மரூபமாகச் சத்தாகவேகாரியம் இருந்து காரணவியாபாரத்தால் வெளியாகின்றது என இரண்டாவது பக்ஷம் சாங்கிய யோக பாசுபதர்களுக்காம்; பிரஹ்மத்தினின்றும் சகத்துப் பரிணாமமென்பதே வைஷ்ணவர்களுக்காம்; ஸ்வப்ரகாச பரமாநந்த அத்விதீயப் ப்ரஹ்மமானது தன் மாயையின் வசத்தால் மித்தையாகவே சகத்தாகாரமாகக் கற்பிக்கின்றது என மூன்றாவது பக்ஷம் பிரஹ்ம வாதிகட்காம். சகலப் பிரஸ்தான கர்த்தாக்களாகிய முனிகளுக்கும் விவர்த்தவாத பர்யவசானத்தால் வேதாந்தப் பிரதிபாத்யமான அத்விதீயப்பரமேஸ்வரனிடத்திலேயே தாற்பர்யமாம். அம்முனிவர்கள் பிராந்தர்களன்று; அவர்களுக்குச் சர்வஞ்ஞத் தன்மையுண்மையின். பின்னையோ பகிர்விஷய (ஆசக்தர்களுக்கு) ப்ரவணர்களுக்கு † முன்னரே

† ஸாமான்யமாகவே ஆரம்பத்திலேயே என்றுமாம்.


யே பரமபுருஷார்த்தத்தில் பிரவேசம் உண்டாகாதென நாஸ்திக்ய நிவாரணத்தின் பொருட்டு அம்முனிவரால் பிரகார பேதங்கள் தரிசிப்பிக்கப்பட்டன.


அவற்றில் அவர்களுடைய தாற்பர்ய மிருத்தலை யறியாது வேதவிருத்தமான அர்த்தத்திலும்தாற்பர்யம் காண்பவர்களாய் அம்மதமே கிரகிக்கத் தக்கதெனக் கிரகிப்பவர்களாய் உள்ள ஜனங்கள் நாநாமார்க்கத்தைப் பஜிக்கின்றவர்களாகின்றார்கள். சர்வம் மங்கலம்.

பிரஸ்தான பேதம்.


முற்றிற்று.







VEDANTA BOOK DEPOT.




சம்ஸ்கிருத மொழிபெயர்ப்புப் புத்தகங்கள்.
இதுகாறும் தமிழில் வராதவை.

சித்தாந்த பிந்து.

இது சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த தசசுலோகியின் வியாக்கியானம். இவ்வியாக்கியானம் செய்தவர் ஆரிய பாஷையில் மகாக்கியாதிபெற்ற மதுசூதன சரஸ்வதீ சுவாமிகள். இப்புஸ்தகம் ஆத்மா இன்னது அநாத்மா இன்னது என்பது பற்றிச் சுருதியாதிப் பிரமாணங்களுடன் யுக்திசகிதமாக நன்கு விளக்கிக் கூறுகின்றமையின், வேதாந்த சாஸ்திரத்திற்கு ஒரு திறவுகோல் போல்வதாம். இதில் அறியவேண்டிய விஷயங்களெல்லாம் சுருக்கமாகவும் விளக்கமாகவும் பண்டிதர் முதல் பாமரரீறாயுள்ள யாவரும் நன்குணருமாறு விளக்கப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் ஒவ்வொருவர் கையிலும் அத்தியாவசியகமா யிருக்கத்தக்கதென்பது அதனது விஷய அட்டவணையைப் பார்க்க நன்கு விளங்கும்.

இது தார்க்கிக சிரோமணி அப்பாசாஸ்திரியா ரவர்கள் சிஷ்யரும், தௌகித்திரரும், வியாச சூத்திர சங்கர பாஷியத்தின் மொழிபெயர்ப் பாசிரியருமாய நன்னிலம் தாலுக்கா விஷ்ணுபுரம் - பிரஹ்மஸ்ரீ, இராமச்சந்திர சாஸ்திரியாரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

ராப்பர்-விலை அணா 8.



சர்வதரிசன சங்கிரகம்.


இது ஸ்ரீசங்கரபீடத் தாசிரியரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளா லருளிச்செய்யப்பட்டது. இதில் 16-மத சித்தாந்தங்களடங்கி யிருக்கின்றன. இது பிரஹ்மஸ்ரீ விஷ்ணுபுரம் ராமச்சந்திர சாஸ்திரிக ளவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது; மதங்களின் சொரூபங்களை யறிய விரும்புவோருக்குப் பெருங் கருவியா யுள்ளது; இதுகாறும் தமிழில் வாராதது. சாங்கர தரிசன மின்றி 15 மதங்களடங்கி யுள்ள இங்கிலீஷ் மொழிபெயர்ப்புப் புத்தகத்தின் விலை ரூபாய் 7—14—0. சுலபமாக யாவரும் வாங்கிப் படிக்குமாறு தமிழ் மொழிபெயர்ப்பாகிய இப்புத்தகத்தின் விலை ரூபாய் 2—8—0 ஆக வைக்கப்பட்டிருக்கின்றது.

1. சார்வாக தரிசனம்
2. பௌத்த தரிசனம்
3. ஆருகத தரிசனம்
4. இராமாநுஜ தரிசனம்
5. பூரணப்பிரஞ்ச தரிசனம்
6. நகுலீசபாசுபத தரிசனம்.
7. சைவ தரிசனம்.
8. பிரத்தியபிஞ்ஞ தரிசனம்.
9. இரசேசுவர தரிசனம்.
10. வைசேஷிக அவலோக்கிய தரிசனம்
11. நியாய தரிசனம்
12. ஜைமினி தரிசனம்
13. பாணினி தரிசனம்
14. சாங்கிய தரிசனம்
15. பதஞ்சலி தரிசனம்
16. சாங்கர தரிசனம்.

வேதாந்த பரிபாஷை.

இது வேதாந்த வித்வச் சிரோமணி யென்று மிகப் பிரசித்தி பெற்றுள்ள தர்மராஜ தீட்சிதரா லியற்றப்பட்டது. இஃதெட்டுப் பரிச்சேதமுடையது. இதனால் வேதாந்தத்திற் குரிய பிரமாணங்க ளிவ்வளவென்பதும் அவற்றின் பயனும் வேறு அனுபவ ரக்சியங்களும் தெளிவா யறிந்துகொள்ளலாம்

இது மேற்படி சாஸ்திரியார் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது. ராப்பர் - விலை அணு 10.



தோடகமென்னும்

வேதசார சமுத்தரணம்.

ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத்பாதாசாரிய சுவாமிகளின் முக்கிய சீடருளொருவராகிய ஆநந்தகிரி யென்னும் ஸ்ரீ தோடகாசிரியரவர்கள் தமது குருபரன் றிருவருளால் பாதந்தோறும் நான்கு சகணங்கள் வாய்ந்த தோடக சந்தத்தால் மறைமுடி வியாவையுந் தொகுத்துச் சுருதிசார சமுத்தரணம் என்னு மிந்நூலை வடமொழியிற் றிருவாய்மலர்ந்தருளினர். அருமையும் அருளும்வாய்ந்த விந்நூல் தேவவாணியுணர்ந்தார்க் கேயன்றித் தமிழ் மக்களுக்குப் பயன்படா திருப்பது கருதி ஸ்ரீகோவிலூர் மடாதிபதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமது வீரசேகர ஞானதேசிகர் பாதசேகரராகிய ஸ்ரீசுப்பைய சுவாமிகளவர்களால் தமிழில் செய்யுள் வடிவமாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. விலை அணு நான்கு.

தருக்காமிர்தமும் பிரஸ்தான பேதமும்.

விலை அணா எட்டு.

இவை திருக்களராண்டவரென்னும் ஸ்ரீவீரசேகர ஞான தேசிக ரவர்களின் டாதசேசரராகிய ஸ்ரீசுப்பய்ய சுவாமிக ளவர்களால் சம்ஸ்கிருதத்தினின்றும் மொழிபெயர்த் தருளப் பட்டன.

(1) தருக்காமிர்தம் சம்ஸ்கிருதத்தில் ஜகதீச பட்டாச்சாரி யார் அவர்களா லியற்றப்பட்டது. இதற்கு முன்னமொரு மொழிபெயர்ப் பிருப்பினும், அதில் மூலத்தி லில்லாத விஷ யங்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றன. அதுபற்றிச் சம்ஸ்கிரு தத்திற்கு நேராக விருக்குமாறு இது சுத்தபாடமாக மொழி பெயர்க்கப்பட்டது.

(2) பிரஸ்தானபேதம் சம்ஸ்கிருதத்தில் ஸ்ரீ சங்கரபீடத் தாசிரியரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிக ளவர்களால் திருவாய்மலர்ந் தருளப்பட்டது. இஃது இதுகா றும் தமிழில் வாராதது நொக்கி, தமிழ்மக்கட் குபயோகமா மாறு மொழிபெயர்க்கப்பட்டது.

சிவமஹிம்ந ஸ்தோத்திரம்.

இது கந்தர்வர்கட் கிறைவராகிய ஸ்ரீபுட்பதந்தாசிரியாவர்களால் ஸ்ரீ மகாதேவரது அநந்த கல்யாண குணங்களைத்தொகுத்து முப்பத்திரண்டு சுலோகவடிவமாகத் திருவாய் மலர்ந்தருளப்பட்டது.

இதற்கு ஸ்ரீ அத்வைதசித்தியாதி கிரந்தகர்த்தரும் சர்வஞ்ஞ சூடாமணியுமாகிய ஸ்ரீ மதுசூதன சரஸ்வதி சுவாமிகளவர்களால் மிகவு மழகியவொரு வியாக்கியானஞ்செய்யப்பட்டிருக்கின்றது; பூர்வாசிரியர்களு மிந்நூற்குப் பாஷியமியற்றியிருக்கின்றனர். அகோபலி யெனப் பெரிய அரும்பெரும் வியாக்கினமும், சுபோதினி யென்னும் சிறிய வியாக்கியானமும் இன்னும் பல வியாக்கியானங்களு மிந்நூற்குள. இத்தகைய அருமைவாய்ந்த விந்நூல் தேவவாணியி லிருப்பதால் அவ்வும்பர்வாணி யுணர்ந்தார்க்கன்றித் தமிழ் மக்கட்குப் பயன்படாமையை யுணர்ந்து அன்னோரு முணருமாறு ஷெ கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சுப்பைய சுவாமிகளவர்களால் தமிழில் செய்யுள் வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டது. விலை அணு ஒன்று.

வாக்கியசுதை யென்னுந்


திருக்குத் திருசிய விவேகம்

மூலமும் உரையும். (மொழிபெயர்ப்பு)

திருத்தமான இரண்டாவது பதிப்பு.

இஃது அநேக வேதாந்த சாஸ்திரங்களின் ஆசிரியரும், சங்கரபீடத்தாசிரியரா யெழுந்தருளியிருந்தவருமாய ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகளாலருளிச் செய்யப்பட்டது. வேதாந்த சாஸ்திரங்களின் முக்கிய அபிப்பிராயத்தை மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கியிருப்பதுபற்றி இது முமுட்சுக்க ளொவ்வொருவராலும் பொன்னே போற் போற்றப்படுவது. சமாதிபுரிய விருப்புள்ள ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததா யுள்ள இந்நூல் சுத்தப் பதிப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றது. விலை அணா 2.

இவ்விரண்டாவது பதிப்பில் சோபானபஞ்சகம், மனீடா பஞ்சகம், சதகம், விவேக சதகம் என்னுமிவை முமுட்சுக்களுக்கு மிகுதியும் பயன்படு மென்று கருதி சேர்க்கப்பட்டிருக்கின்றன.



சிவப்பிரகாசப்

பெருந்திரட்டு


(குறுந்திரட்டுடன்).

இது சோருபாநந்தரால் திரட்டப்பட்டது;

இதுகாறும் வெளிவராதது;

சாஸ்திரநுபமாயுள்ளது.

இதில் 224 அதிகாரங்க ளிருக்கின்றன. முமுட்சுக்களுக்கே யன்றி, மதங்களின் சொரூபங்களையும் அவற்றின் பேதங்களை யும் அறிய விருப்ப முடையாருக்கும், உபந்நியாசர்கட்கு மிந் நூல் பெருங் கருவியாயுள்ளது. இதில் 2821 செய்யுட்களிருக் கின்றன; பெருந்திரட்டிலில்லாத குறுந்திரட்டின் 424 செய் யுட்களு மிருக்கின்றன. இது டிம்மி 8 - பக்கங்கொண்ட 80 - பாரவளவு புத்தகம். விலை ரூபாய் மூன்று.




நவநீதசாரம் (வினு விடை).

இது வாசிட்ட முதலிய நூல்களின் கருத்துக்களைச் செவ் வனே விளக்குவது. இப்புத்தகம் படிப்பதால் வாசிட்ட முத லிய அரிய பெரிய நூல்களின் இரகசியங்களை யெல்லாம் எளி தில் அறிந்து கொள்ளலாம்; 158 பக்கங்கொண்ட புதிய பதி ப்பு. காலிக்கோ பைண்டு-விலை அணு 8.

ரிபுகீதைத்திரட்டு (குறிப்புரையுடன்).

மகா இதிகாசங்களு ளொன்றாகிய சிவரகசியத்தின் ஆறாவது அம்சத்திலுள்ள ரிபுகீதை வடமொழிப் பயிற்சியுடையார்க்கன்றித் தமிழருக்குபயோகமாகா திருத்தலைநோக்கித் திருவிடைமருதூர்ப் பிட்சு சாஸ்திரிகளென்றுவழங்கும் உலகநாத சுவாமிகளவர்களால் 1924 பாடலாகத் தமிழில் மொழிபெயர்த்தருளப்பட்டது. அது தமிழ்மக்க ளியாவருக்கும் பெரிதும் உபயோகமாகும்படி விஷயப்பொருத்தம்விடாது 874 பாடலாகத்திரட்டப்பட்டு அவசியமானவிடங்களிற்குறிப்புரை எழுதப்பட்டு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுத்தப்பிரதியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இது முமுட்சுக்க ளொவ்வொருவராலும் அத்தியாவசியகமாய் விரும்பத்தக்கதென்பது மிகு பிரசித்தம். காலிக்கோ பைண்ட்-விலை ரூபாய் ஒன்று.




விவேக சூடாமணி.

சுத்தபாடம்-பாக்கேட்சைஸ்-விலை அணா 8.

இது ஸ்ரீசங்கரபூஜ்ய பகவத்பாதாசாரியசுவாமிகளவர்களால் திருவாய்மலர்ந் தருளப்பட்டது. இந்நூல் தமிழ்மக்கட்குப் பெரிதும் பயன்படுமாறு திருவிடைமருதூர்ப் பிட்சு சாஸ்திரிகளென்னும் உலகநாத சுவாமிகளவர்களால் 671 பாடலாக மொழிபெயர்த்தருளப்பட்டது. இதில் 164 அரிய பெரிய விஷயங்க ளடங்கியிருக்கின்றன. இது முமுட்சுக்களொவ்வொருவராலும் பொன்னேபோல் போற்றப்படுவது; ஆத்மாநாத்ம விவேகமடைதற்குப் பரம சாதனமாயுள்ளது.

தர்க்கபரிபாஷை (விரிவான குறிப்புரையுடன்).

சர்வ வித்தைக்குந் தீபமாயும், சகல கர்மங்கட்கு முபாய மாயும், சகல தர்மங்கட்கு மாசிரயமாயுமுள்ள தர்க்க சாஸ்திரம் சம்ஸ்கிருதத்திற் பிரபலமாயிருப்பதுபோல்தமிழிலிராமையின், அக்குறை நிவிர்த்தித்தற் பொருட்டுத் துறைமங்கலம்—சிவப் பிரகாச சுவாமிகளால் மொழிபெயர்க்கப்பட்ட தர்க்க பரி பாஷை, சட்தரிசனங்களு ளொன்ருகிய நியாய சாஸ்திரத்தை யநுசரித்துப் பிரமாணமுதல் நிக்கிரகஸ்தான மீருகச் சோடஸ (பதினறு) பதார்த்தங்களைச் சங்கிரகமாக நிரூபிப்பதா யிருத்த லின், அது பிரஹ்மஸ்ரீ விஷ்ணுபுரம்—இராமச்சந்திர சாஸ் திரியாரவர்கள் முன்னிலையிற்பரிசோதித்துச்செப்பஞ்செய்து தர்க்காப்பியாசஞ் செய்யும் யாவருக்கும் பிரமாணமுதலிய வற்றின் ஞானம் எளிதி லுண்டாகுமாறு அவசியம் வேண்டு மிடங்களில் விரிவாகக் குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. காலி க்கோ பைண்டு-விலை ரூபாய் ஒன்று.



பாட்டியற் கொத்து


(உரையுடன்).

இதில் வச்சணந்திமாலை, சிதம்பரப்பாட்டியலின் பொரு த்தவியல் மரபியல், நவநீதப்பாட்டியல், சம்பந்தப்பாட்டியல் அடங்கியிருக்கின்றன. இது நூலின் முன்மொழி இலக்கண மும் பிரபந்த இலக்கணமும் ஆராய்வார்க்குப் பெருங் கருவியா யிருப்பதாம். விலை அணு 6.

வேதாந்தசாரம்.

சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு - வசனம்.

இது யாவருக்கும் விளங்கக்கூடிய எளிய செந்தமிழ் நடையில் வினுவிடையாக வசனரூபமாயுள்ளது. இவ்வரிய பெரியநூல் இதுகாறும் சுத்தபாடமாக வாராததை நோக்கி நன்கு ஆராய்ச்சிசெய் தச்சிடப்பட்டுள்ளது. வேதாந்த சாஸ்திரத்தின் முக்கியமான இரகசியங்களை யெல்லாம் எளிதிலறிந்து கொள்வதற்கு இதுபோன்ற நூல் தமிழில் பிறிதொன்றின் றென்பது அதனது விஷய அட்டவணையைப் பார்க்க நன்கு விளங்கும். இந்நூல் மோட்சவிச்சையுள்ள ஒவ்வொருவர் கையிலும் இன்றி யமையா திருக்கத் தக்கதாம்; வேதாந்த சாஸ்திரங்களின் நுட்பங்களை எளிதிலறிந்து கொள்வதற்குத் தீபம் போல்வதாம். ராப்பர்-விலை அணு 10.



நாநாஜீவவாதக் கட்டளை


(குறிப்புரையுடன்). திருத்தமான இரண்டாவது பதிப்பு.

ஆரம்பத்தில் வேதாந்தம் படிப்பவர்களுக்கு இப்புஸ்தகம் பெரிதும் உபயோகமாயுள்ளது. உபாத்தியாயர் சகாயமில்லாமலே இதனுல் வேதாந்தத்தின் பிரக்கிரியைகளெல்லாம் நன்ருய்த் தெரிந்துகொள்ளலாம். இப்புத்தகம்படிப்பவர்கள் வேறு எந்த வேதாந்த புத்தகங்களையும் படிப்பதற்கு அதிகாரிகளாவர்; இது விரிவாக எழுதப்பட்ட குறிப்புரையுடன் கூடிய இரண்டாவது பதிப்பு. இதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிஷ்யர் சுவாமி ராமகிருஷ்ணனந்த ரவர்களும், கோயிலூர் பொன்னம்பல சுவாமிகளவர்களும், தஞ்சை—தப்புசாமி ராஜு அவர்களும் நல்லபிப்பிராயம் கொடுத்திருக்கின்றனர். விலை அணு 4.

அறிவானந்த சித்தியார்.


சுத்தபாடம் - விலை அணா 4.

இந்நூல் வலங்கை மீராமனு ரென்னும் பெரியாரா லருளிச்செய்யப்பட்டது. இதில் 183 அரிய பெரிய விஷயங்களடங்கிய 326 செய்யுட்களிருக்கின்றன. இதனால் நல்லாசிரியரிடத்துப் பலவருடங் காத்திருந் தறியத்தக்க விஷயங்கள் பலவும் தெளிவாயறிந்து கொள்ளலாம். இது முமுட்சுக்களுக்குப் பரமசாதனமா யுள்ளதென்பது இதன் பெயராலேயே நன்கு விளங்கும். இது தற்காலங் கிடைத்தற் கருமையாயிருக்கின்றமை பற்றிப் பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு பரிசோதித்துச் சுத்தபாடமாகப் பதிப்பிக்கப்பட் டிருக்கின்றது.



திருவாசகம்.

இது பிழையறப்பரிசோதித்து
உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.
பாக்கெட் சைஸ் $5\frac{1}{2} X 3\frac{1}{2}$ அங்குலம் அளவு.
காலிக்கோ பைண்ட் விலை அணா 10.



தோத்திரக்கோத்து. விலை அணா 1.


இதில் ஔவையா ரருளிச் செய்த விநாயகரகவல் வேழமுகம், கபில தேவரருளிச் செய்த இரட்டை மணிமாலை, உலக நீதி, நக்கீரதேவாருளிச்செய்த விநாயகரகவல் திருமுருகாற்றுப் படை அடங்கியிருக்கின்றன.

திருக்குறள் - பரிமேலழகருரை,

தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரை.

விலை ரூபாய் 6.

இப்புத்தகம் டிம்மி 8 பக்கங்கொண்ட அளவில் 1300 பக்கங்களுக்கு மேற்பட்டது; 2 வால்யமாகக் கலிக்கோ பைண்ட் செய்யப்பட்டது. உபாத்தியாயர் சகாயமில்லாமலே பரிமேலழகருரையின் அருமை பெருமைகளை யெல்லாம் இதனால் நன்ருகத் தெரிந்துகொள்ளலாம். இது தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரைகள் பரிமேலழகருரைக் கிணங்கப் புதிதாக எழுதப்பட்ட முதற் பதிப்பு.



மெய்ஞ்ஞானபோதம்.

இது 1911 வது வருடத்து லோகோபகாரியின் முதற்பக்கத்திற் பிரசுரமான வேதாந்த விஷயங்கள் அடங்கிய புத்தகம். இதில் 52 வேதாந்த உபந்நியாசங்க ளிருக்கின்றன; உபசாந்தத்திற் கேதுவான ஆத்மாநாத்ம விவேகத்தை யுண்டாக்குவதற்குப் பரமசாதனமா யுள்ளது.

 விலை அணா பன்னிரண்டு.



தபாற்சார்ஜ் பிரத்தியேகம்.

கோ வடிவேலு செட்டியார்,

தமிழ்ப்பண்டிதர்,

15 - வேங்கடாசலாசாரி வீதி,

கோமளேசுவரன்பேட்டை.